*12*

# ஏழுமடங்கு ஒருமையைக் கொண்டிருத்தல்

## (4:4–6)

*சபையின் ஐக்கியத்தைக் குறித்து விவாதிக்கும் போது, பவுல் ஏழு தெய்வீக "ஒன்றுகள்" மீது அங்கத்தினர்கள் ஐக்கியப்பட்டிருக்க வேண்டியதை வரிசைபடுத்தினார். தேவன் தமது வசனத்தில் சொன்ன இந்தக் கோட்பாடுகளை கனப்படுத்த கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஐக்கியம் கோருகிறது.*

## *ஒரே சரீரம் (4:4)*

**[4]ஒரே சரீரமும்.**

***வசனம் 4. ஒரே சரீரம்*** *என்பது கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தைக் குறிக்கிறது. தேவன் கிறிஸ்துவை "அவருடைய சரீரமாகிய" சபைக்கு தலையாக அமர்த்தினார் (1:22, 23). அவர் யூதர்களையும் புறஜாதிகளையும் "ஒரே புதிய மனுஷனாக" உண்டாக்கி சிலுவையில் இருதிறத்தாரையும் "ஒரே சரீரமாக" தேவனுக்கென்று ஒப்புரவாக்கினார் (2:15, 16). புறஜாதிகள் "உடன் சுதந்தரராக உடன் அங்கத்தினர்களாக சரீரத்தில் இருக்கிறார்கள்" (3:6), தொடர்ந்து பவுல் கிறிஸ்துவின் சரீரம் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவருடைய பகுதியைச் செய்து அதை எடுத்துக் கட்ட வேண்டும் என்று விளக்கப்படுத்தினார் (4:12, 16). கிறிஸ்து "சரீரத்துக்கு இரட்சகராகவும்" இருக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம் (5:23). இந்த வாக்கியங்களிலிருந்து ஒருவர் கிறிஸ்துவுக்கு ஒரே சரீரம் மட்டுமே உண்டு என்கிற சரியான முடிவுக்கு வருவார்; அந்த ஒரே சரீரம், யூதர்களையும் புறஜாதிகளையும் கொண்டு, தேவனோடு ஒப்புரவாக்கப்பட்ட எல்லாரையும் கொண்டு அமைவு பெற்றது; சரீரமானது அந்தந்த அங்கங்கள் தன் தன் வேலையைச் கொண்டு கட்டமைப்பு பெற்றது. மற்றும் அந்த சரீரம் இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது. ஒருவர் தேவனிடத்தில் ஒப்புரவாகி பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவாரானால், அவர் சபையிலே ஒரு அங்கமாகிறார்.*

*ஒரு நபர் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டும் சபையில் அங்கம் வகிக்க வில்லை எனும் கருத்து அல்லது அந்த நபர் இரட்சிப்புக்காக செய்வது ஒரு காரியம் சபையில் அங்கம் வகிக்கச் செய்வது மற்றொரு காரியம் என்பது புதிய ஏற்பாட்டில் காணப்படாத ஒன்று. மேலும், பலதரப்பட்ட பெயர் சபைகளில் இருக்கிறவர்கள், பலதரப்பட்ட முரண்பாடான உபதேசக் கொள்கைகளைப்*

போதிப்பவர்கள், கிறிஸ்துவின் சரீரத்தோடு கட்டமைப்புப் பெற்றவர்கள் எனும் கருத்து புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு அந்நியமானது. சபையிலே பிரிவினைகள் இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு நேரடி எதிர்ப்பாக இருக்கிறது (காண்க 1 கொரிந்தியர் 1:10).

சபை கிறிஸ்துவின் "சரீரமாக" அநேக பயன்பாட்டு பதங்களாக வசனங்களின் பிற இடங்களில் போதிக்கப்படுகிறது. கிறிஸ்து சபைக்குத் தலைமைத்துவம் கொண்டிருப்பது அவருக்கு சகல அதிகாரமும் சபையின் மேல் உண்டு, சபையின் செயல்பாடுகளை அவர் தமது சித்தத்தின் மூலம் வழிநடத்துகிறார், அவை புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (காண்க மத்தேயு 28:18; கொலோசெயர் 1:18; 1 பேதுரு 4:11). சபையைக் குறித்து சரீரம் என்று விவரிப்பது "அநேக அங்கங்கள்" ஆனால் "ஒரே சரீரம்" எனும் குறிப்பை அளிக்கிறது (1 கொரிந்தியர் 12:12). கிறிஸ்தவர்கள், "ஒரே ஆவியினாலே ... ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள்" (1 கொரிந்தியர் 12:13). இதன் பொருள், ஒன்றேல் நாம் ஆவியின் *உபதேசங்களுக்குக்* கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றிருப்போம் அல்லது ஞானஸ்நானத்தின் போது ஆவியானவர் ஒரே சரீரத்தில் அங்கம் *வகிக்க செய்கிறார்.* ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றவன் என்பது இதன் பொருள் அல்ல. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்ற சம்பவம் இரண்டு இடங்களில் மட்டுமே வசனங்கள் அடையாளப்படுத்துகின்றன: இவைகள் அப்போஸ்தலர்களை நடபடிகள் 1:5; 2:4ல் சொல்லப்பட்டபடியும் நடபடிகள் 10:44-47; 11:15-17 ன்படி கொர்நெலியு வீட்டாரையும் உட்படுத்தியவை. 1 கொரிந்தியர் 12:13ல், பவுல், "நாம் எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்" என்று சொன்னார். "எல்லாருக்கும்" கொடுக்கப்படுகிற, இந்த ஞானஸ்நானம் (காண்க மத்தேயு 28:19, 20; மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38, 39), தண்ணீர் தேவையையுடையது (நடபடிகள் 8:36-39). எபேசியர் 4:5 "ஒரே ஞானஸ்நானம்" மட்டுமே இன்றைக்கு நமக்கு உண்டு, அது நம்மை "ஒரே சரீரத்திற்குள்ளாக்குகிறது" என்று சொல்லுகிறது.

பவுல் மேலும் ஒரே சரீரத்தில் இருக்கிற பலவித அங்கங்களுக்கும் வித்தியாசப்பட்ட அலுவல்கள் இருப்பதாகக் காட்டினார் (1 கொரிந்தியர் 12:14-20). மாமிச சரீரத்தில் ஒவ்வொரு அவயவமும் அதற்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்து இயங்க வைக்க தேவன் செயல்பட்டது போலவே, சபையிலும் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவருக்கென்று சொந்தமான வரமோ தாலந்தோ திறமையோ பெற்று முழு சரீரத்துக்கும் அதன் நலனுக்காக அர்ப்பணிப்பது அவசியம். சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் அவசியமானது என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 12:21-24). மாமிச சரீரத்தில், பார்வைக்கு கண் நல்லது, ஆனால் கேட்பதற்கல்ல. சரீர அவயவங்கள் தன் தன் பணியைச் செய்யும் போது மாமிச சரீரம் இயக்கம் பெறுகிறது. அதேபோல, கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும். சபையிலிருக்கும், ஒவ்வொரு அங்கத்தினரும், தன்னால் இயன்றதைச் செய்யும்போது, சரீரம் முழுவதும் தேவன் செய்ய விரும்புகிறதை சாதித்துக் காட்டுகிறது.

சரீரம் ஒருமைப் பட்டிருக்க வேண்டும். பிரிவுபட்டுள்ள மாமிச சரீரம் சரியாக இயங்காதது போலவே பிரிந்திருக்கும் சபை சரியாக இயங்காது. கிறிஸ்துவின் சரீரம் ஒருவரையொருவர் அன்பு காட்டும் அங்கத்தினர்களால்

*கட்டமைப்புப் பெற்றது மற்றும் “ஒருவருக்கொருவர் சம அக்கறை காட்டக் கூடியவர்களாயிருக்கிறார்கள்” அதினால் “ஒரு அவயவம் பாடுபட்டால் கூட எல்லா அவயங்களும் பாடுபடும்” (1 கொரிந்தியர் 12:25, 26). மாமிச சரீரத்தின் ஒரு அவயவம் பாதிக்கப்பட்டால், முழு சரீரமும் பாதிப்படையும். அதேபோல, சபையிலுள்ள ஒரு அங்கத்தினர் பாதிக்கப்பட்டாலும், எல்லாரும் பாதிப்படைவார்கள்; ஒரு அங்கத்தினர் சாதனை பெற்றால், அது அனைத்து அங்கத்தினரின் சாதனையாகிறது.*

*வேதாகம அடிப்படையிலான ஐக்கியத்தை முன்வைக்க வேண்டியதைப் பேசும் பவுல், வசனத்திற்கு முறையான மரியாதை செலுத்த, அவர் சொன்னார், “ஒரே சரீரம்” உண்டு, கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு சபை மட்டுமே உண்டு, பலதரப்பட்ட கலாச்சாரங்களைக் கொண்டுள்ள நம்முடைய சமுதாயம் வேறு எப்படிப்பட்ட வித்தியாசமான கருத்துக் கொண்டிருந்தாலும் சரி.*

## ஒரே ஆவி (4:4)

**[4]ஒரே ஆவியும் உண்டு.**

***வசனம் 4. ஒரே ஆவி*** *என்பது, தேவனுடைய நித்திய நோக்கத்தை, வெளிப்படுத்தல் மூலம், தெரியப்பண்ணின பரிசுத்த ஆவியானவர் (காண்க 1 கொரிந்தியர் 2:13; எபேசியர் 3:1-10). அவர் சரீரத்திற்கு ஜீவனைக் கொடுக்கிறார் (2 கொரிந்தியர் 3:6), சபையிலே வாசம் பண்ணுகிறார் (1 கொரிந்தியர் 3:16), மற்றும் கிறிஸ்தவனுக்குள் தங்கியிருக்கிறார் (1 கொரிந்தியர் 6:19). அவர் கிறிஸ்தவனை பெலப்படுத்தவும் செய்கிறார் (எபேசியர் 3:16) மேலும் அவனை கர்த்தருடைய நாளில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்தரத்தை அடைந்து கொள்ள ஆவியினால் முத்திரையிடுகிறார் (காண்க எபேசியர் 1:13, 14). இந்த ஒரே ஆவியானவர் சரீரத்திற்குள் இருப்பவர்களை தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெறச் செய்கிறார் (2:18) மேலும் சரீரத்திற்குள்ளாக ஒற்றுமைப்படுவதற்கு அவரே ஊற்றுக் காரணமாயிருக்கிறார். ஆகையால், இந்த ஐக்கியம் “ஆவியின் ஒருமை” என்று அழைக்கப்படுகிறது (4:3).*

## ஒரே நம்பிக்கை (4:4)

**[4]உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல,**

***வசனம் 4.*** *அழைக்கப்பட்டிருத்தல் மற்றும் அழைக்கப்படுதல் ஆகியன முன்பு இந்த நிருபத்தில் முன் வைக்கப்பட்ட கருத்துக்களே. 1:18, 19ல் தாம் “நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்று கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு” பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று பவுல் வேண்டிக் கொண்டார். அவர் 4:1 ல், “நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள்” என்று கேட்டுக் கொண்டார். முதலாவது வசனப் பகுதியில், அழைத்தவரைக் குறித்து வலியுறுத்தல் கொடுக்கப்பட்டது, இரண்டாவது வசனப் பகுதியில் அழைப்பைக் குறித்து வலியுறுத்தப்படுகிறது. வசனம் 4 அழைக்கப்பட்ட*

*தனிநபர்களைக் குறித்துப் பேசுகிறது. அழைக்கப்படுதல் மற்றும் நம்பிக்கைக்கு ஐக்கியம் எந்த வகையில் சம்பந்தப்படுகிறது? அங்கு சபையிலிருந்த புறஜாதிகள் ஒரு காலத்தில் கிறிஸ்துவை விட்டு பிரிந்திருந்தவர்களும் நம்பிக்கையில்லாதவர்களுமாயிருந்தார்கள், ஆனால் இப்போதோ அவர்கள் கிறிஸ்தவர்களான போது கிறிஸ்துவுக்குள் நம்பிக்கையுள்ளவர்களானார்கள் (1:12; 2:12). இந்த நம்பிக்கை எபேசியர்களுக்குக் கொடுக்கப்பட்டது ஏனெனில் அவர்களை நம்பிக்கையிலே கொண்டு வருவதில் தேவனே முதல்படியை எடுத்து வைத்தார் (1:18). அவர்களுடைய நம்பிக்கை தேவனுடைய நித்திய நோக்கமான பரலோகத்தையும் பூலோகத்தையும் ஒப்புரவாக்க வேண்டுமென்ற தேவனுடைய நித்திய நோக்கத்தில் ஒரு அங்கமாக மாறுவதைப் பொறுத்து அமையக்கூடியது (காண்க 1:9, 10). பரலோகத்தையும் பூலோகத்தையும் ஒன்றிணைப்பதன் நோக்கம் யூதர்களும் புறஜாதிகளும் "ஒரே மனிதனாக" உண்டாக்கப்பட்டு, "ஒரே சரீரத்திற்குள்ளாக்கப்" பட்டபோது ஒரு சிறிய அளவில் காணப்பட்டது (2:15, 16) தேவனோடு ஒப்புரவாகுதலையும் (2:16) சரீரத்திற்குள் இரட்சிப்பையும் (5:23) கொண்டு வந்த இந்த ஐக்கியம் சபையின் அன்றாட வாழ்விலே வாழப்பட வேண்டிய ஒன்று.*

***நம்பிக்கை,*** *என்பது (elpis), என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒரு வார்த்தை, அதன் பொருள் "ஏதோ ஒரு நல்லதை அடைந்து கொள்ள வேண்டுமென்றே விருப்பத்தோடே எதிர்பார்த்திருப்பது"*[1] *நாம் சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டவர்கள்; நாம் சரியான வழியிலே அதற்கு பதில் அளிக்கும் போது, நாம் "அழைக்கப்பட்டவர்களாகிறோம்." அழைக்கப்பட்டவர்களுக்கு, தேவனிடத்திலிருந்து நமக்கு நம்பிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் நமது நம்பிக்கை சார்ந்திருக்கிறது. நமக்கு இரட்சிப்பின் நம்பிக்கையிருக்கிறது; மரித்தவர் உயிர்த்தெழுவதில் நமக்கு நம்பிக்கையிருக்கிறது; நாம் கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம்; நாம் நித்திய ஜீவனைப் பெறுவோம் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்; கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நாம் நம்புகிறோம்; அவர் வரும் போது நாம் அவரைப்போல் இருப்போம் என்று நம்புகிறோம்; மற்றும் நமக்கு பரலோகத்தின் நம்பிக்கையும் இருக்கிறது.*[2] *இவைகள் அனைத்தும் "அழைக்கப்பட்ட (நமது) நம்பிக்கையின்" ஒரு பகுதி, அது ஒரே நம்பிக்கை.*

## *ஒரே கர்த்தர் (4:5)*

***5 ஒரே கர்த்தரும்.***

***வசனம் 5. ஒரே கர்த்தர்,*** *என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. "கர்த்தர்" என்பது கிறிஸ்துவுக்கு பவுலின் விருப்பமான பட்டம்.*[3] *புதிய ஏற்பாட்டில், இந்தப் பதம் குறிப்பாக இயேசுவுக்கு அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் உயர்த்தப்படுதலினிமித்தம் கொடுக்கப்பட்டது. ஆதி சபையில் செய்யப்பட்ட பிரதான அறிக்கை "இயேசுவே கர்த்தர்"*[4] *என்பதாக இருந்தது.*

*"கர்த்தர்" எனும் பட்டம் நான்கு வகையான பொருளையுடையது. அது முதலாவது அதிமுக்கியமானதுமான பொருள் அவருடைய அதிகாரம்,*

அது எஸ்டேட் முதலாளி, ஒரு அடிமையின் மீது உள்ள எஜமானனின் அதிகாரம், ஒரு ராஜ்யத்தின் மீது இராஜாவின் சட்டம் இயற்றும் அதிகாரம்[5] ஆகியவற்றை குறிக்கும். "ஒரே கர்த்தர்" எனும் ரீதியில் இயேசுவுக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18). நாம் விசுவாசிக்கிற சகல காரியத்திலும், போதிக்கிற, மற்றும் கைக்கொள்ளுகிற சகல காரியத்திலும் ஆதாரமளிக்கும் அதிகாரமாக கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் பயன்படுத்துகிறோம். அவருடைய அதிகாரம் மனிதன் என்ன நினைக்கிறான், உணருகிறான், அல்லது விரும்புகிறான் என்பவைகளைக் காட்டிலும் மேலாக இடம் வகிக்கிறது. இயேசு "எல்லாவற்றிலும் சபைக்குத் தலையாயிருக்கிறார்" என்று பவுல் சொன்னபோது (எபேசியர் 1:22), அவர் கிறிஸ்துவின் அதிகாரத்தை சுட்டிக்காட்டினார்.

இரண்டாவதாக, "கர்த்தர்" என்பது *உரிமைத்துவத்தைக்* குறிக்கிறது. இயேசு நம்மை சொந்தமாக்கியிருக்கிறார், ஏனெனில் அவர் நம்மை மீட்டிருக்கிறார் (1:7) மற்றும் தமது சபையை தமது இரத்தத்தினாலே கிரயத்துக் கொண்டார் (நடபடிகள் 20:28). நாம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்களாகையால், இனி நாம் நமக்குரியவர்களல்ல (காண்க 1 கொரிந்தியர் 6:19, 20). மூன்றாவதாக, அவர் நம்முடைய கர்த்தராக இருக்கிற படியால், கிறிஸ்து **நமது எஜமானனாக** இருக்கிறார், நாம் அவருடைய ஊழியக்காரர்களாய் இருக்கிறோம் பவுல் தன்னைப் பற்றி எப்போதுமே "ஊழியக்காரன்" என்றே கூறிக் கொண்டார், அதினால் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை தான் ஏற்றுக் கொண்டிருந்தார். நான்காவதாக கர்த்தராக இருக்கும் கிறிஸ்து தமது இராஜ்யத்தில் *இராஜாவாக* இருக்கிறார். நாம் கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் வாழக் கூடியவர்களாயிருக்கிறபடியால், கிறிஸ்துவுக்கு நாம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறோம், கிறிஸ்துவுக்கு ஊழியர்களாயிருக்கிறோம், இயேசுவை ராஜாவாக ஏற்றுக் கொள்கிறோம், கிறிஸ்துவுக்கு செவி கொடுக்கும் கடமையின் கீழ் இருக்கிறோம், அவரைப் பின்பற்றுகிறோம், மற்றும் அவருக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிகிறோம். அவர்தான் "ஒரே கர்த்தர்."

## ஒரே விசுவாசம் (4:5)

[5]**ஒரே விசுவாசமும்.**

***வசனம் 5.*** ஒரே விசுவாசம் என்பது முழுமையான சத்தியம், கிறிஸ்தவ மார்க்கத்தில் அன்போடு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் கிறிஸ்தவத்திற்கு ஒரு குறிப்புச் சொல்லாகவும் அதுவே காணப்படுகிறது. "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம் இதுதான்" (யூதா 3), அந்த விசுவாசத்துக்கு அநேகர் கீழ்ப்படிந்தார்கள் (நடபடிகள் 6:7). பவுல் பிரசங்கித்த இந்த விசுவாசம் தான் ஜனங்களைப் போஷிக்கிறது (கலாத்தியர் 1:23; 1 தீமோத்தேயு 4:6). இந்த விசுவாசத்திலிருந்துதான் அநேகர் விழுந்து போனார்கள், அந்த விசுவாசத்தை நாம் மறுதலிக்கக் கூடும், அநேகர் இந்த விசுவாசத்தை விட்டு வழுவிப்போனார்கள் (1 தீமோத்தேயு 4:1; 5:8; 6:10, 21). ஒரே ஒரு கிறிஸ்தவம் மட்டுமே இருப்பதால், "ஒரு விசுவாசம்" மட்டுமே

உண்டு, சபைக்கு ஒரு முழுமையான சத்தியமும், இன்று ஜனங்களுக்கு ஒரு வெளிப்பாடு மட்டுமே தேவனிடத்திலிருந்து உண்டு.

## *ஒரே ஞானஸ்நானம் (4:5)*

**[5]ஒரே ஞானஸ்நானம்.**

***வசனம் 5. ஒரே ஞானஸ்நானம்*** *- இன்று நடைமுறையில் இருக்கிற ஒன்று - தண்ணீரில் முழுக்குதல் அல்லது அடக்கம் பண்ணப்படுதல், இது ரோமர் 6:4 மற்றும் கொலோசெயர் 2:12ன் படியும். "ஞானஸ்நானம்" என்பது (baptisma), என்பதன் பொழிப்புரை, அது முழுக்கி எடுத்தல் அல்லது அமிழ்த்துதல் போன்றவற்றை உள்ளடக்கியது.[6] மத்தேயு 28:19-20ல் கட்டளையிடப்பட்ட ஞானஸ்நானம், தண்ணீருக்குள் போய் அதிலிருந்து வெளியே வருவதைக் குறிக்கிறது (காண்க யோவான் 3:23; நடபடிகள் 8:36, 38, 39). புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் பெறுகிற நபர்கள் மனந்திரும்ப விருப்பமுள்ள விசுவாசிகள் (மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:38). மற்றும் இயேசுவே தேவனுடைய குமாரன் என்கிற தங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட விரும்புகிறவர்கள் (காண்க மத்தேயு 10:32, 33; நடபடிகள் 8:37; ரோமர் 10:9, 10). ஞானஸ்நானத்தின் நான்கு வகை நோக்கங்கள் இரட்சிக்கப்படுதல் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21), பாவமன்னிப்பைப் பெறுதல் (நடபடிகள் 2:38), அவருடைய சபையில் சேர்க்கப்படுதல் (1 கொரிந்தியர் 12:13), மற்றும் கிறிஸ்துவுக்குள்ளாகுதல் (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27).*

*நடபடிகள் 2:38ல் சொல்லப்படுகிற "உங்கள் பாவமன்னிப்பிற்கென்று" என்பதற்கு மாறாக "நிமித்தம்" என்று சிலர் சொல்லுகிறார்கள், ஆகிலும் "உங்களுடைய பாவமன்னிப்பிற்கென்று" என்பது தான் (ஆங்கிலத்திலும் கிரேக்க மொழியிலும்) ஒரே மாதிரியாக மத்தேயு 26:26-28லும் சுட்டிக் காட்டப்படுகிறது, அங்கே இயேசு தமது இரத்தம் "பாவமன்னிப்பிற்கென்று" சிந்தப்பட்டது என்று சொன்னார். இயேசு ஏற்கனவே "மன்னிக்கப்பட்ட பாவத்திற்காகத் இரத்தம் சிந்தப்பட்டதாகச் சொன்னாரா" அல்லது "பாவமன்னிப்புப் பெறும்படி" என்றாரா? ஏற்கனவே பாவத்திற்கு மன்னிப்பு கிடைத்திருக்குமானால், ஏன் இயேசு மரிக்க வேண்டியிருந்தது? "பாவம் மன்னிக்கப்படும்படி அவர் மரித்தார்," நடபடிகள் 2:38ல் ஞானஸ்நானத்தின் நோக்கம் இதுதான் என்று பேதுரு சொன்னார், ஞானஸ்நானம் பாவமன்னிப்பிலிருந்து பிரிக்கக் கூடாத அளவுக்கு இணைக்கப்பட்டது. ஞானஸ்நானத்திலோ ஞானஸ்நானம் மட்டுமோ எதையும் சம்பாதிக்கவோ தகுதியாக்குவதோ இல்லை; ஆகிலும் கீழ்ப்படிதலின் செயலால், ஒருவர் தேவனுடைய கிருபை வரத்தை ஏற்றுக்கொள்கிறார் - அது தான் பாவங்களுக்கு மன்னிப்பு. எபேசியர் 4ல் பேசப்படுகிற "ஒரே ஞானஸ்நானம்" இதுவே.*

## *ஒரே தேவன் (4:6)*

**[6]எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.**

**வசனம் 6. தேவன் ஒருவரே,** கிறிஸ்து மூலமாக அவர் கிறிஸ்தவர்களுக்கு **பிதாவானார்,** ஏனெனில் கிறிஸ்துவுக்குள் இருக்கிற **எல்லாரும்** அவருடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள் (ரோமர் 8:16, 17; கலாத்தியர் 3:26, 27). இந்த ஒரே தேவனாகிய பிதா **எல்லார் மேலும் இருக்கிறவர்** என்று பவுல் குறிப்பிட்டு, தேவனுடைய மகத்துவத்தைக் குறித்துப் பேசுகிறார். அவர் **எல்லாரோடும்** இருக்கிறவர், என்பது ஜனங்களுடைய வாழ்வாதாரத்தை அருளிச் செய்வதை உட்படுத்திப் பேசப்படுகிறது. இறுதியாக, தேவன் **எல்லாருக்குள்ளும்** இருக்கிறவர் என்று சொல்லப்படுவது, அவர் தம்முடைய ஜனங்களோடு பிரசன்னமாகியிருப்பதை குறிப்பிடுகிறது.

பவுல் ஒற்றுமையின் "ஏழு தூண்களை" - தேவனுடைய வெளியாக்கப்பட்ட சித்தத்தைக் குறித்து முறையான கண்ணோட்டம் பெற நாம் தேடுகிறபடியால் நாம் எல்லாருமே ஏழுசத்தியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த அடிப்படைச் சத்தியங்களை ஏற்றுக் கொள்வதன் மூலமாக மட்டுமே "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையை நாம் காத்துக் கொள்ளக் கூடும்" (4:3).

## கைக் கொள்ளுதல்

**கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு தேவனுடையதிட்டம் (4:4-6).**

தேவனுடைய பிரதானத்திட்டங்களில் ஒன்று ஐக்கியம். நமது ஐக்கியத்துக்கு (ஒற்றுமைக்கு) அமைப்பைக் கொடுக்கும் ஏழு "ஒன்றுகளை" பின்னணியாக பவுல் பெயரிடுகிறார். நாம் எல்லாரும் ஒரே சரீரத்தில் சமமான அங்கமாயிருக்கிறோம். அந்த ஒரு சரீரத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரே ஆவி கொடுக்கப்பட்டுள்ளது; நம்மில் ஒவ்வொருவருக்குள்ளாகவும் அவர் வாசம் பண்ணுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வதிக்கப்பட்ட வருகையினிமித்தம், ஒரே நம்பிக்கை நம்மில் ஒவ்வொரு இருதயத்தையும் நிரப்புகிறது. நம்மை ஆளுகிறதற்காக ஒரே கர்த்தர் நமக்கு உண்டு. ஒரே விசுவாசம், அதாவது, ஒரே வகையான போதனைகள், நம்முடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிறது, நாம் அடிப்படையில் பொதுவான விசுவாசத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறோம். சகல கிறிஸ்தவர்களும் அந்த ஒரே சரீரத்தில் ஒரே மாதிரியாகத்தான் உள்ளே பிரவேசித்தோம்: ஒரே ஞானஸ்நானத்தின் மூலமாக. ஒரே தேவனும் பிதாவும் எல்லாருக்கும் உண்டு. அவரே கடந்தகால நித்தியத்தி லிருந்து எதிர்கால நித்தியம் வரை நம்மில் அன்புகூருபவர் எல்லாவற்றிலும் தலை சிறந்த சிந்தனையுடையவராயிருக்கிறார், நாமும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்!

தம்மைப் பின்பற்றிவருவோருக்கு இயேசுவின் இறுதி ஜெபம்; "... பரிசுத்தபிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும் படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும்"; "ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கு, என்னை நீர் அனுப்பினதையும், ... அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படி வேண்டிக் கொள்கிறேன்" (யோவான் 17:11, 23).

கிறிஸ் புல்லார்டு

குறிப்புகள்

[1]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 911. [2]*காண்க நடபடிகள் 23:6; 24:15; 26:6, 7; ரோமர் 1:6; 8:24; 1 கொரிந்தியர் 15:19; கொலோசெயர் 1:5, 27; 2 தெசலோனிக்கேயர் 2:14; 1 தீமோத்தேயு 1:1; தீத்து 2:13; 1 யோவான் 3:2, 3.* [3]*காண்க ரோமர் 10:9; 14:8, 9; 1 கொரிந்தியர் 8:6; 12:3; பிலிப்பியர் 2:9-11.* [4]Willam Barclay, *Jesus As They Saw Him* (London: SCM Press, 1962), 408–20. [5]Ibid. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 165.